(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த குறிப்பில் இந்தத் துள்ளு வியாதியால் பாதிக்கப்பட்ட 18 ஆடுகளில், 14 ஆடுகள் இறந்து விட்டதாகத் தெரிகிறது. இது கிட்டத்தட்ட 80 விழுக்காடு ஆகும். இந்த வேகத்தில் போனால் ஆட்டு இனமே அழிந்து போய்விடுமே. இது பெரிய இழப்பு ஆயிற்றே. அதற்கு தடுப்பு ஊசி போடப்பட்டதா அல்லது மருந்து கண்டுபிடிக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாணபுமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆடுகள், குறிப்பாக இளம் ஆடுகள் புரதச் சத்து மிக்க தீவனம் அதிகப்படியாகச் சாப்பிடுவதால் இரைப்பையில் சுரக்கும் அமிலங்கள் மிதப்பட்டு வியாதிக்கான நுண் கிருமிகள் மிக அதிகமாகப் பெருகி, அவைகள் வெளிப்படுத்தும் நச்சுப் பொருள்கள் ரத்தத்தில் கலந்து மிக விரைவில் மரணம் ஏற்படுகிறது. ஆகையால், இந்தத் துள்ளு வியாதி தொத்து நோய் அல்ல; அது அதிகமாகச் சாப்பிடுவதன் வாயிலாகத்தான் இந்த நோய் ஏற்படுகின்றது. இந்த நோய் வருவதற்கு முன் தடுப்பு ஊசிகள் போட முடியாது. மற்ற ஆடுகளுக்குப் பரவுவதற்கு முன் மற்ற ஆடுகளுக்கும் தடுப்பு ஊசிகள் போடுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

6. அறிக்கை அளித்தல்.

பொது கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, "1974–75 மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் அறிக்கை(வருவாய் வரவினங்கள்) குறித்த பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை (இரண்டாவது அறிக்கை)" அளிக்கிறேன்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநர் உரைமீதான விவாதம் நடைபெறுகையில் சட்ட முன் வடிவுகளை அறிமுகம் செய்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அரசினர் சட்ட முன்வடிவுகள் அறிமுகம்.

டாக்டர் கே. சௌரிராஜன்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு எடுக்கப்படுவதற்கு முன்னால் இப்படி அரசினர் சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்வது முறையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். பல தடவை இப்படி நடந்து விட்டது. நாங்கள் யாராவது